


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | அடி 3 | ஜுலை 19 | (18-7-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 25


● நீதிமன்றத்தில் திருச்செல்வம் வாதம்

# தனித்தமிழ் நாட்டின்மீது ஆட்சி செலுத்துவதற்கு தனிச்சிங்கள நாட்டுக்கு அதிகாரம் கிடையாது!

## பாலஸ்தீன மக்களின் கோரிக்கையை விட வலுவுடையது ஈழத் தமிழர் கோரிக்கை!

"சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட ஈழத்தமிழ் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு சிங்கள நாட்டுக்கு கிஞ்சித்தும் உரிமை கிடையாது. ஈழத்தமிழ் நாட்டு மக்கள் பாரம்பரிய பெருமைக்குரிய இனத்தினர்; ஆண்ட பரம்பரையினர்; இத்தகைய தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறுமலும் சட்டத் தொடர்பற்றும் சிங்கள இனம் தான் விரும்பியபடி தயாரித்த அரசியலமைப்புக்கு ஈழத்தமிழ் நாட்டு மக்கள் கட்டுப்படவோ பணிந்துபோகவோ வேண்டிய அவசியமில்லை; அவர்கள் தங்கள் இறைமையை பிரயோகித்து தமிழ ஈழ நாட்டைப் புனரமைப்பதற்கு இன்று உறுதிகொண்டு நிற்கிறார்கள். சிங்கள இனம் நிறைவேற்றிய அரசியலமைப்பை 1972 மே 22ம் திகதி தீயிட்டுக் கொழுத்தியது மட்டுமன்றி அச்சட்டத்துக்கு எதிராக ஒவ்வோராண்டும் போராடி வருகிறார்கள்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராக சிறீலங்கா குடியரசினுல் தொடரப்பட்ட வழக்கில் திரு. அமிர்தலிங்கத்தின் சார்பில் நீதிபதிகள் குழு முன்னர் வாதாடிய திரு. எம். திருச்செல்வம் கியூ. சி, குறிப்பிட்டார்.

தமது வாதத் திறமையின் மூலம்—ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திலுள்ள நியாயத்தை சாதுரியமாக நீதிமன்றத்தில் முன்வைத்து புதிய சாதனையை ஏற்படுத்திய திரு.

### தடுப்புக்காவல் பத்திரங்களை வாங்குவதற்கு தமிழ் இளைஞர் மறுப்பு!

சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தடுப்புக்காவல் உத்தரவுகள் வழங்கப்படுவது வழக்கம். ஆனல் இந்த முறை 35 தமிழ் இளைஞர்கள் தமக்குத் தரப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகளை (Detention Order) வாங்குவதற்கு சிறைச்சாலையில் மறுத்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

திருச்செல்வம், தமது உரையை தொடங்குகையில், "இந்த நாட்டின் அரசியலமைப்புத் திட்டத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று சவால் விட்டிருக்கும் தமிழ் மக்களின் சார்பாகவே இப்போது நான் பேசுகிறேன்" என்று குறிப்பிட்டு தமது பேச்சை ஆரம்பித்தார்.

"பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கத்துவம் பெறும் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு நாடு இல்லாத போதிலும் அவர்களை

—5-ம் பக்கம் பார்க்க

## தனிநாடு முழக்கம் நீதிமன்றத்தை அதிரவைத்தது!

## அகிம்சைப் போராட்டம் தேசத்துரோகமா?

### நீதிமன்றத்தில் ஜீ.ஜீ.

"திரு. அமிர்தலிங்கம் அங்கத்துவம் வகிக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் அதிமுக்கிய ஓர் அரசியல் தீர்மானம் (தமிழீழம் பற்றியது) சபாநாயகரின் அங்கீகாரத்துடன் தேசிய அரசுப் பேரவையின் ஒழுங்குப்பத்திரத்திலேயே இடம்பெற்றிருக்கிறது. ஆனல் ஜனதிபதியின் அவசரகால சட்டப்பிரமாணங்கள் அரசியல் சட்டத்தின் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கும் இவ்வுரிமை உட்பட குடியுரிமைகளை குழிதோண்டிப் புதைத்துள்ளன. இதனுல் திரு. அமிர்தலிங்கம் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் இயக்கம் சுயநிர்ணய உரிமையை ஏற்படுத்துவதற்காக அஹிம்சை வழியில் நடத்தும் சட்டபூர்வமான அரசியல் போராட்டங்கள் தேசத்துரோகக் குற்றமாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன. எனவே எதிரிமீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு ஏதுவாகவுள்ள இச்சட்டப்பிரமாணங்கள் அரசியலமைப்



புத்திட்டத்துக்கு முரணனவை."

—இவ்வாறு 13-7-76ல் நீதிமன்றத்தில் திரு. அமிர்தலிங்கம் சார்பில் வாதாடிய திரு ஜீ ஜீ. பொன்னம்பலம் கியூ. ஸி, கூறினர்.

தமிழ் ஈழத்தேசி... விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிங்களக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இனி அணுவளவும் இடமில்லை!"

## தமிழினம் தன்னைத்தானே ஆள்வதற்கு வழிகோலுவோம்!

### திருக்கோணமலையில் மூதறிஞர் பேருரை!

"உங்கள் மத்தியிலே எழுந்து நிற்பதற்கு நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். உங்களின் மத்தியில்தான் எங்களின் முதல் கூட்டம் நடைபெற்றது. அந்த சந்தர்ப்பத்தில் எமக்கு மாறாக இருந்த திரு. சிவபாலன் ஒரு பேச்சு பேசினார். அவர் பேசி முடிப்பதற்கு முன்னரே அவர் என்ன பேசினார் என்பது அங்கு கூடியிருந்த மக்களுக்குப் புரிந்துவிட்டது. மக்கள் நாங்கள் கொண்ட கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். அது நடந்து இப்போது இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகிறது.

"தமிழ் இனத்துக்கும் சிங்கள இனத்துக்கும் உள்ள பிரிவினை அதிகரித்துள்ளது, அதுபற்றி நான உங்களுக்கு சில விடயங்கள் எடுத்துக் கூற வேண்டும். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சம உரிமை பெற்று ஒன்றுகூடி வாழுவது விலலங்கமாகிவிட்டது. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றுகூடி வாழுவதற்கு என்ன விலங்கங்கள் உண்டு என்று மக்கள் விசாரிக்கின்றார்கள். சிங்கள இனம், தமிழ் இனம் ஒத்துவாழ கொஞ்சமேனும் இடம கொடுக்கலைலை.

நாங்கள் சிங்கள இனத்தோடு ஒத்துவாழ எத்தனையோ செய்தும் அதை அவர்கள் ஏற்பதற்கு மறுக்கிறார்கள். சிங்களவர்கள் மத்தியிலே வாழ்ந்த திரு. பண்டாரநாயக்கா ஒரு அரசியல் ஞானி என்று கூறலாம். திரு. பண்டாரநாயக்கா தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ்வதற்காக சிந்தித்து என்னோடு சில ஒப்பந்தங்கள் செய்தார். அவ் ஒப்பந்தத்தை நான் அவரோடு எழுதி முடிக்கையில் அப்பொழுதிருந்த சில முக்கியமான அமைச்சர்கள் எங்களோடு இருந்தார்கள். எங்களில் சிலரும இருந்தார்கள். நானும் அவரும் எழுதி முடித்து கையெழுத்திட்டோம். அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற சிங்கள மக்கள்விடவில்லை— அவர் விரும்பியும பல சிங்கள் மக்கள வீட்டை முற்றுகையிட்டு அதைக்கிழித்து எறியும்படி கூறினார்கள. அதைக்கிழிப்பது யோக்கியமில்லை என்பதை திரு. பண்டாரநாயக்கா அறிந்திருந்தும் சிங்கள மக்களுக்குப் பயந்து அதைக் கிழித்து எறிந்துவிட்டார்.

அடுத்த நாள் திரு. பண்டாரநாயக்கா அவர்கள் என்னைக் கூப்பிட்டு, "இதை நிறைவேற்ற முடியாமல இருக்கிறது; சிங்கள மக்கள் விடுகிறார்களில்லை; சிங்கள மக்கள ஏற்காதபோது நான் வேறு என்ன செய்ய முடியு? நான பொலிசாரை அழைத்து இவர்களை சுட்டுத்தள்ளுவதா கூறுங்கள்" என்று கூறினார். அவர் கருத்து என்னவென்றால், சிங்கள மக்கள் அப்படி எழுந்து வருகையில்தான் எப்படி இசைந்து கொடுக்கமுடியும் என்பதே.

நீங்கள் சட்டசபைக்குப் போய் இப்பொருத்தத்தைப் பெலப்படுத்தும்படி கேளுங்கள் என்று திரு. பண்டாரநாயகா என்னிடம் சொன்னார். நான் சொன்னேன்— உங்கள் கையில் எல்லா அதிகாரமும் இருக்கையில் நீங்கள் பிரதமராக இருக்கையில் நான் அங்கு போய் என்ன செய்ய முடியும் என்றேன்.

அடுத்து பண்டாரநாயக்காவின் எதிர்க்கட்சியினரான டட்லியுடன் பொருத்தமொன்றை எழுதினேன் அதில் முக்கிய விடயம் என்னவென்றால் தமிழ் மக்கள் தாம் பெரும்பான்மையாய் வாழுமிடத்தில் தாம் ஒன்றுகூடிப் பிரச்சினையை எப்படித்தீர்ப்பது என்பதுதான். அவ் ஒப்பந்தத்தில் அவர் கையொப்பமிட்டு நான்கு ஐந்து வருடங்களின்பின் நிறைவேற்றாமல் கிழித்து எறிந்துவிட்டார். அதிலும் விசேட அம்சம் தமிழர் தம் அலுவல்களைப் பார்ப்பதற்கு மிகவும் குறைந்தபட்ச உரிமைகளைப் பெறவேண்டும் என்பதுதான் —சிங்கள மக்களின் எதிர்ப்பைக் கண்டு பண்டாரநாயக்காவும் பயந்தார் டட்லியும் கைவிட்டார் அதனால் சிங்கள மக்களுடன் பொருத்தங்கள் செய்வதில் ஒரு பிரயோசனமும் இல்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

இப்பொழுது நாங்கள் வந்த முடிவு என்னவென்றால் தமிழன வாழவேண்டுமானால் சிங்கள மக்களிடம் இருந்து பிரிந்து தமிழன் தன் நாட்டை தானே ஆளவேண்டும் என்பதுதான்.

இப்போதையப் பிரதமர் இதையெல்லாம் மறந்துவிட்டு தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க தன்னோடுவந்து பேசவேண்டும் என்கிறார். நாங்கள் சொல்வது என்னவென்றால் உங்கள் புருஷன் ஒரு அரசியல் ஞானி, டட்லியும ஒரு அரசியல் ஞானி அவர்களோடு பொருத்தங்கள் செய்தே சரிவராத போது உங்களோடு பொருத்தம் செய்து என்ன பிரயோசனம் என்ற அளவிற்கு வந்துள்ளோம்.

அதனால்தான் திருகோணமலை மாநாட்டில் தனிநாடு இலட்சியத்தை பிரசாரம் செய்கின்றோம். திருகோணமலை மக்களிடையே பிரசாரம் தேவையில்லை. ஏனென்றால் திருகோணமலை மக்கள் எங்களோடு இருக்கின்றார்கள்.

எனக்கு இப்பொழுது 78 வயது ஆகிவிட்டது. நான் இன்னும் கனகாலம் இருப்பது ஐமிச்சம். ஆனால் சாகமுன்பு தமிழினத்துக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு சாகத்தான் எனது விருப்பம்.

வடமாகாண மக்கள் சிங்களவெள்ளத்திலிருந்து சிலவேளை தப்பி-பிழைத்து விடுவார்கள். கிழக்கு மாகாண மக்கள் பாடுதான் வில்லங்கமாய் இருக்கும். அதற்காகத்தான் நாங்கள் கிழக்கு மாகாணத்தில் சுற்றித் திரிகிறோம். ஆனபடியால் உங்கள் கையில் உள்ள விஷயம் மிகப்பெரிய விஷயம், சிங்கள மக்கள் இங்கு வாழ்வது போல நாமும் எங்கள் சுயநிர்ணய உரிமையோடு நிலைத்து வாழவேண்டும் அதை எடுத்துச் சொல்லத்தான் நடுங்கிய நிலையிலும் நான் வந்து நிற்கிறேன். ஆனபடியால நான் சொல்வதைக் கேட்டு தமிழ் நாட்டை உருவாக்க "ஒத்துழையுங்கள எனக்கேட்டுக்கொள்கிறேன்."

10-7-76ல் திருகோணமலையில் இடம்பெற்ற மாநாட்டு பொதுக்கூட்டத்தில மேற்கண்டவாறு மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் தான் நிகழ்த்திய தலைமை உரையில் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து உரை நிகழ்த்திய த. வி. கூ. இணைச்செயல் அதிபர்களில் ஒருவரான திரு. மு.சிவசிதம்பரம் அவர்கள், "தந்தை செல்வநாயகம் அவர்கள் தனக்கு 78 வயதாகிவிட்டது தான் இன்னும் கனகாலம் வாழ்வது நிச்சயமில்லையென்றும் கூறினார். ஆனால் நாங்கள் அவருக்கு, நீங்கள் மறையுமுன்னமே தமிழ் நாடு அமைத்தே தீருவோம் என்று உறுதி கூறுகிறோம்.



4 ஆண்டுகளுக்கு முன் பல கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருந்த நாம் உங்கள் நாட்டில் 72ம் ஆண்டு மே 14ம் திகதி தமிழர் கூட்டணியாக இணைந்தோம்.

இங்கு தமிழர்கள் சுதந்திரமாய், சுயமரியாதையாய் வாழவேண்டின் தனிநாடு தவிர வேறுவழியில்லை என்ற முடிவுடன் கூடியுள்ளோம்.

ஆகஸ்ட் ஐந்துக்குள் சிறையில் உள்ள இளைஞர்கள் விடுதலை செய்யப்படாவிட்டாலோ, அன்றேல் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படாவிட்டாலோ அம்மையாருக்கு அறிவித்துவிட்டு சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க சிறையில் உள்ள இளைஞர்கள் தீர்மானித்துவிட்டார்கள் அம்மையாருக்குக் கூறிவைக்க விரும்புகிறோம். இளைஞர்களின் உயிருடன் விளையாட வேண்டாம் அவர்களுக்கு ஏதும் நடந்தால் தமிழ் மக்கள் பொங்கி எழுவார்கள் என்பதை அறிவிக்கிறோம்.

எனவே எங்கள் போராட்டத்திற்கு தொண்டர்கள் அவர்கள் அளிக்கக்கூடிய பங்கைஅளிக்கட்டும், போராட்ட வீரர்கள் அவர்கள் அளிக்கக்கூடிய பங்கை அளிக்கட்டும். அதுவும் முடியாதவர்கள் தங்கள் உணவை ஒறுத்தாகுதல் உங்கள் உதவியைத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

பல்லாயிரக்கணக்கானோர் ஆண்களும் பெண்களுமாக திரண்டிருந்த இக் கூட்டத்தில் நாவலர் அ. அமிர்தலிங்கம், திருகோணமலைத் தீர்மானங்களை பொதுமக்களுக்குப் படித்துக்காட்டி விளக்கமளித்தார். திருவாளர்கள் க. ஜெயக்கொடி, க துரைரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தா. சிவசிதம்பரம், சே மா. செல்லத்தம்பு, அடலேறு ஆலாலசுந்தரம், ஈழவேந்தன், ஆ ரகுபதி பாலசிறீதரன், திருமதி கலா தம்பிமுத்து, டாக்டர் ஆ. உதுமா லெவ்வை, செ. இராசதுரை, அ. தங்கத்துரை ஆகியோரும் பேசினர். திரு. பா. நேமிநாதன் பா. உ. வரவேற்புரை நிகழ்த்தினர்;

9-7-76 பிற்பகல் தலைவர்களுக்கு அன்பு வழிபாத்திற்கு தாகலமான வரவேற்பை பொதுமக்கள் அளித்தனர்; திருகோணமலை நகரம் முழுவதும், மாநாட்டையொட்டி உதயசூரியன் கொடிகளாலும், தோரணங்களாலும் எழிலுற அலங்கரிக்கப்பட்டு காட்சியளித்தது.

9-7-76 பிற்பகல் 3 மணிக்கு உதயசூரியன் கொடியை தேசிய கீதம் முழங்க மாநாட்டு பந்தலின் முன்னால் திருகோணமலை முற்றவெளியில் தந்தை செல்வா ஏற்றிவைத்தார்.

—6-ம் பக்கம் பார்க்க.

## ஆண்டவனில் நம்பிக்கைவைத்து தமிழர் நடத்தும் அறப்போரே தமிழீழ விடுதலைப்போர்!

"மனிதனது உரிமைகள் அத்தனையும் அவனுக்கு இறைவன் கொடுத்த உரிமைகள் இவைகளைப் பறிக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. இறைவனுக்கேகூட அந்த அதிகாரம் இல்லை என்றால், நிச்சயமாக ஆள்வோருக்கும் அந்த அதிகாரம் இல்லை. இவை பறிபோகும்போது ஏனென்று எதிர்க்க எவருக்கும் உரிமை உண்டு. அந்த கட்டத்தில் தான் இன்று ஈழம்வாழ் தமிழர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்றுகூடி இருக்கின்றோம்—எங்களுக்கு பண பலம் படை பலம் இல்லை ஆனால் தூய உள்ளம் உண்டு. சுதந்திரமாக வாழ்வோம் என்ற துணிவு உண்டு. அபயம் அளிக்கும் ஆண்டவன் அருகில் நிற்கின்றான் என்ற நம்பிக்கை உண்டு—ஆண்டவனில் நம்பிக்கை கொண்டுதான் அறப்போரில் குதித்துள்ளோம்—எனவே இது தூய்மையான போர். இறைவனில் ஊற்றெடுத்து தமிழ் பேசும் இனத்தவரை ஊடுருவிப் பாய்ந்து தனிநாட்டை, இன்பத் தமிழ் நாட்டை ஆக்கித்தந்து, ஆங்கு உரிமையுடன் வாழ்வோம் என்னும் உண்மையை உலகறிய எடுத்துக்கூறும் உன்னத போர் இது."

—திருகோணமலை மாநாட்டு கலாசார அரங்கில் வண. ஜோசெப் மேரி அடிகளார் பேசியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் - சிறையுடைக்கும்!

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

திருக்கோணமலை சென்றுவந்தேன்—திண்ணிய நெஞ்சம் கொண்ட தீரர்கள் கோட்டம் சென்றுவந்தேன் — திருநாடாம் தமிழ் ஈழத்தின் விடுதலைக்காய் எதையும் தரத்தயாராக இதயம் குமுறியபடி எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் எரிமலையாகி எழுந்திடும் காட்சி அங்கு கண்டேன்; இதயம் சிலிர்த்தேன்! இதயமே வாவென இளையதலைமுறையினரை அழைத்திருந்தேன் — எண்ணற்ற தமிழ் இதயங்களுடன் அங்கு உறவாடினேன்! ஆமாம், தமிழ் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து —பட்டிதொட்டிகளிலிருந்து—குக்கிராமங்களிலிருந்து — மூலைமுடுக்குகளிலிருந்துவந்து திருகோணமலையில் சங்கமித்திருந்த இயக்க நண்பர்களை — உடன்பிறப்புக்களை சந்திப்பதும், அளவளாவுவதும், ஆங்காங்குள்ள இயக்கச் செய்திகளை அறிந்திடுவதும், நமது இயக்கத்தின் வேகம்பற்றியும், அமைப்புப்பற்றியும் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசுவதும் இனிமையான ஒரு அனுபவமல்லவா? அந்த அனுபவத்தை நான் திருக்கோணமலையிலே வைத்தபோது 'நாமெல்லாம் ஓர் குடும்பம்' என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடலே என் நினைவுக்கு வந்தது!

நண்பா, மாநாட்டையொட்டி திருக்கோணமலை வெங்கெணும் காணப்பட்ட எழுச்சியையும் துடிப்பையும் இலட்சிய ஆர்வத்தையும் என்னென்பேன்? என்னென்பேன்? வீதிகள் தோறும், வீடுகள் தோறும் ஓசை வெனப் பறந்திடும் உதயசூரியன் கொடிகள் அலங்காரச் சோடனைகள்; ஆடவர், பெண்டிர், இளையோர், மாணவர், வயோதிபர் அனைவர் மத்தியிலும் எழுச்சியுடன் கலந்த மகிழ்ச்சிப் பிரவாகம்; எங்கணும் உணர்ச்சிவெள்ளம்; முற்றவெளியிலோ மாபெரும் அலங்காரப் பந்தல்; ஆங்கு இயல், இசை நாடகம் முத்தமிழும் கலந்த கலை நிகழ்ச்சிகள்; ஆம், கோணேசன் குடியிருக்கும் அக்கோட்டம், தமிழ்க்குலம் காக்கும் விடுதலைப் போராட்டத்தின் உயிருட்டமாக இன்று நேற்று — கடந்த கால்நூற்றாண்டுகாலமாகவன்றோ இருந்துவருகிறது?

திருக்கோணமலை வாழ் வீர இளைஞர்களின் ஏகப்பிரதிநிதியாக இன்று வெலிக்கடை வெஞ்சிறையிலே தவஞ்செய்துவரும் வீரத்தம்பி சிறீஸ்கந்தராசா, திருகோணமலை மாநாட்டுக்கு முன்னர் சிறைச்சாலை அதிகாரியின் அனுமதிபெற்று எனக்கு எழுதியிருந்த கடிதம் ஒன்றில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"அண்ணா, 5-11-75ல் கைதான நான் இன்னும் இச்சிறைச்சாலையிலேதான் இருக்கிறேன். நீங்கள் திருக்கோணமலைக்கு 9-10ம் திகதிகளில் நடைபெறும் விழாக்களுக்கு நிச்சயம் போவீர்கள் என நம்புகிறேன். மேற்படி விழாக்கள் சிறப்புற நடக்க இறைவனை வேண்டுகிறேன். அவ்விடம் உள்ளோருக்கு நான் மிகவும் திடமான நெஞ்சத்துடன் இவ்விடம் இருப்பதாகவும், எந்தவிதமான தியாகங்களைச் செய்வதற்கும் தயாராக இருப்பதாகவும் தயவுசெய்து தெரிவியுங்கள்! தனிப்பட்ட முறையில் இச்சிறைவாழ்வில் நான் பாதிக்கப்பட்டு இருந்தாலும் தர்மத்துக்காக என் பங்கையும் திருக்கோணமலையிலிருந்து நான் ஒருவனே செய்வதை நினைக்கும்போது என் கவலைகள் யாவும் பறந்தோடிவிடுகின்றன. திருக்கோணமலை பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் என் வாழ்த்துக்களை உங்கள் மூலம் தெரிவிக்கிறேன்."

இவ்வாறு தம்பி சிறீஸ்கந்தராசா எனக்கு எழுதியிருந்த உணர்ச்சியும் வைராக்கியமும் நிறைந்த கடிதத்தை திருக்கோணமலை முற்றவெளியில் திரண்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களிடையே படித்துக்காட்டி, அவரது ஆசையை நிறைவேற்றத் துடித்தபடி இருந்தேன்—ஆனால் அங்கு மேடையில் பேசுவதற்கு எனக்குவாய்ப்புத்தரப்படாதபோதிலும் சிறீயின் சேதியை திருகோணமலையில் சந்தித்த நண்பர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அது கேட்டு அடைந்த பூரிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை;

நண்பா, திருக்கோணமலை மாநாட்டில் எடுக்கப்பட்ட பண்டியதீர்மானங்களையொட்டி விவாதிக்கப்பட்ட விஷயாலே சனைக் கூட்டத்தில்—தமிழ் இளைஞர்கள் காட்டிய உணர்ச்சியும், தீவிரமும், துடிப்பும் அதே சமயம் கட்டுப்பாடும் கண்டு என்நெஞ்சம் பூரித்தது செயல், செயல் என்று துடித்தபடி இருக்கும் எழுச்சிபெற்ற இளைஞர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியின்உள்ளேயிருந்து, அதை முடுக்கியபடியே இருப்பார்களேயானால் — செயல்படாதவர்களுக்கும், இடுப்பொடிந்தோருக்கும் போலிகளுக்கும், பொதுததேர்தலையேநோக்கமாகக்கொண்ட பதவிப்பித்தர்களுக்கும் கூட்டணியில் இடமேயில்லாமற்போய்விடும்! ஒரு முழு விடுதலை இயக்கமாக கூட்டணி மலர முடியும்!

திருக்கோணமலை மாநாட்டில் மேலோங்கி நின்ற பிரச்சினை—எல்லோரது இதயத்தையும் கசக்கிப் பிழிந்து கொதித்தெழ வைத்த பிரச்சினை—சிறையிருக்கும் தமிழ்ச் சிங்கேறுகள் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போவதாக அறிவித்திருந்ததுதான்!

அன்னையைப் பிரிந்து, தந்தையைப்பிரிந்து அருமை சகோதரர்களைப் பிரிந்து சொந்த ஊரைப் பிரிந்து, அன்பு மனைவியை, அருமைக் காதலியைப் பிரிந்து, சீராட்டிப் பாராட்டி வளர்த்தெடுத்த மழலைகளைப் பிரிந்து—ஏன் தமிழ் ஈழத்தையே விட்டுப் பிரிந்து, சிங்கள நாட்டுச்சிறைச்சாலைகளில் நைந்து நைந்து நாளும் வாடி, கொந்தளிக்கும் உளத்தினராய் ஆண்டுக்கணக்காக சிறுகச் சிறுகச்செத்துக் கொண்டிருக்கும் நம் உடன்பிறப்புக்கள்— இரத்தத்தின் இரத்தங்கள் இன்றைக்கு ஓர் முடிவுக்கு வந்துவிட்டார்கள்!

எந்தவித குற்றமும் செய்யாத இந்த தமிழ் ஈழத்து இளைஞர்கள்—மானமுள்ள தமிழர்களாகப் பிறந்து, ஈனநிலை துடைத்தெறிந்து இனிய சுதந்திரம் காண இயங்கியதற்காக — விசாரணையின்றி வெங்கொடுமைச் சிறையிலே நாதியற்றுப் பூட்டப்பட்டுக் கிடக்கிறார்கள்! ஒரு திங்களா, இரு திங்களா? ஓராண்டா, ஈராண்டா, பல ஆண்டுகள்! பல்லாயிர நாட்கள்!!

தமிழன் எண்ணிக்கை உலகத்தில் ஏழு கோடியெனப் புள்ளி விபரம் கூறினாலும்—எங்கும் அடிமை இவன்! இவனை ஏதுசெய்தாலும், எப்படிக்கொடுமைப்படுத்தினாலும், எப்படி நசுக்கினாலும், இவனுக்கு யார் குரல் கொடுப்பார்? இவனுக்கென்றோர் நாடுண்டோ? படையுண்டோ? முடியுண்டோ? கொடியுண்டோ கொற்றமுண்டோ—உலகிலே அனாதை இவன்! எப்படியும் அடக்கிடலாம்; எதுவேண்டினும் செய்திடலாம்; இவனுக்கு உதவிட எவன்வருவான் எனும் திமிரிலே தமிழ் ஈழத்து இளைஞர்களை காரணமின்றிக் கைதுசெய்து சிறையிலே பூட்டிவைத்து அவர்களது வாழ்வை அழித்து வருகிறது அரசு இதே திமிரிலேதான் 1974 ஆண்டு தை 10ம் நாள் உலகத்தமிழ் மாநாட்டிலே கூடியிருந்த தமிழ் மக்களின் எலும்புகளை எண்ணி — மங்கையரை மானபங்கப்படுத்தி— ஒன்பதின்மர் உயிரையும் குடித்தது.

இந்நிலையிலேதான் நண்பா-நமக்கு நாமே உதவி—தர்மம் நிச்சயம் நமது பக்கம் இருப்பதால் இறைவன் எங்கள் பக்கமே எனும் உறுதியுடன், வைராக்கியத்துடன் அநீதிக்கும், அக்கிரமத்துக்கும் எதிராக சிறைச்சாலைக்குள்ளேயே தங்களை முற்றுமுழுதாக அர்ப்பணித்து ஆன்மீகப் போராட்டம் ஒன்றை நடத்துவது என்ற முடிவை சிறையிருக்கும் இளைஞர்கள் எடுத்துவிட்டார்கள்!

எதுவித குற்றமுமற்ற இளைஞர்களை — தங்கள் சமுதாயத்தின் பிறப்புரிமைகளை வலியுறுத்திய தமிழ் ஈழநாட்டு இளைஞர்களை — மற்றோர் நாடான சிங்கள நாட்டின் அரசு காரணமின்றிக் கைது செய்து சிறைகளில் ஆண்டுக்கணக்காக அடைத்து வைத்து அவர்களது வாழ்வை சிறுகச்சிறுகஅழிக்கின்ற இந்த அக்கிரமம் ஓர் சர்வதேசப் பிரச்சினையாக்கப்படவேண்டும்! ஒரு நாட்டுப் பிரஜைகளை இன்னோர் நாடு கைதுசெய்வதும் சிறையிலடைப்பதும் குற்றமென்றால்—சிங்கள அரசு செய்வதும் அதே போன்றதோர் குற்றமே!

எனவேதான் இந்த நிலையை அம்பலப்படுத்தவும்—அதர்மத்தை எதிர்த்து அஹிம்சை நெறியில் பட்டினிகிடந்து போராடவும், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் தீர்மானித்து இதை அரசுக்கு அறிவித்தும் விட்டார்கள். எங்கிருந்தாலும், எந்த நிலையிலும் நியாயத்துக்காக போராடுபவர்களே இலட்சியவாதிகள்! ஆகவே தங்களை அழித்துக்கொண்டாவது தமிழினத்துக்கு ஒளி கொடுக்க எண்ணும் இத்தியாக வீரர்கள் நடத்தவிருக்கும் ஆன்மீகப் போராட்டத்துக்கு கண்கள் குளமாக— இதயம் ஏங்கியழ—எங்கள் நல்லாசிகளை வழங்குவோம்!

ஆனால் ஆகஸ்ட் ஐந்தில் சிறைச்சாலைகளிலே நம் தங்கத்தம்பியர், தம் இன்னுயிரைப் பணயமாக்கி—எக்கொடுமையையும் சந்திக்கத் தயாராகி — இருக்கும் உயிர் ஒன்றுதான்; அது போகப்போவதும் ஒரு தடவைதான்; அது தமிழினத்தின் எழுச்சிக்காகப் பயன்படட்டும் என்ற திடசங்கற்பத்துடன் உண்ணாவிரதத்தை தொடங்கும்போது வெளியிலே நாம் என்னசெய்யப்போகிறோம்? தமிழினம் என்ன செய்யப்போகிறது? வழமை போல, உண்டு உறங்கியபடி வெறும் சோற்றாலடித்த பிண்டங்களாக இருக்கப்போகிறோமா? அல்லது தானுடாவிட்டாலும் தசையாடும் என்றபடி எழுச்சிகொண்டு ஏதாவது செய்யப்போகிறோமா? அல்லது அவர்களை சிறைகளில் செத்துமடிய விட்டுவிட்டு, அவர்கள் செத்தபின்னர் அனுதாபக் கூட்டம் போட்டு, சிலைவைத்து, ஆண்டுதோறும் அஞ்சலி செய்துகொண்டு தேர்தல் விளையாட்டுடன் காலங்கடத்தப்போகிறோமா? இதையே நாம் நம்மிடம் கேட்கவேண்டும்; நம் மனச்சாட்சியிடம் கேட்கவேண்டும்!

சிறைச்சாலைகளில் இருக்கின்ற இளைஞர்கள் எடுத்துள்ள முடிவை பொதுமக்களுக்கு எடுத்து விளக்கவும், துண்டுப்பிரசுரங்களை சட்டவிரோதமாக வெளியிடவும் இளைஞர் குடும்ப உதவி நிதிக்குப் பணம் திரட்டவும், யூலை 23 முதல் ஒருவாரகாலத்தை "சிறையிருக்கும் இளைஞர் வாரமாக" அனுட்டிப்பதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி தீர்மானித்துள்ளது.

ஆகஸ்ட் 5க்குள் தமிழ் இளைஞர்களை நீதி விசாரணைக்கு கொண்டுவராமலோ— விடுதலை செய்யாமலோ இருந்து — குறிப்பிட்டபடி ஆகஸ்ட் 5ல் இளைஞர்களின் உண்ணாவிரதம் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படுப்பட்சத்தில், தமிழ்ஈழம் முழுவதும் அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பிக்கின்றவகையில் தீவிர போராட்டம் வெடிக்கும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி எச்சரித்துள்ளது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இத்தீர்மானங்கள் செயற்பட நம் பூரண ஒத்துழைப்பை நல்கும் அதே வேளையில் சிறையிருக்கும் நம் சகோதரர்களின் போராட்டத்துக்கு நமது பங்கை வேறு எவ்விதம் செலுத்தலாம்? எந்தெந்த முறைகளில் நமது ஆதரவை வெளிப்படுத்தலாம்? இதயம் திறந்து எண்ணங்களை சுருக்கமாக எழுதுங்கள்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# மனச்சாட்சிக்கு ஒரு சவால்

எவ்வித நீதி விசாரயுணையின்றி-பன்னூறு நாட்களாக —பல ஆண்டுகளாக சிறைச்சாலைகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் ஓர் இறுதி முடிவுக்கு வந்துவிட்டார்கள்!

நீதி கிடைக்கும்—இந்த அரசு நியாயமாக நடக்கும் விடுதலை செய்யும் அல்லது விசாரணைக்குட்படுத்தும் என்று அல்லும் பகலும் ஆண்டுக்கணக்காக எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த இந்த இளைஞர்கள் சிறைச்சாலைக்குள்ளேயே ஆன்மீகப்போராட்டமொன்றை நடத்துவதென்று உறுதி பூண்டுவிட்டார்கள்!

ஆழமாகச் சிந்தித்து — தெளிந்த மனதுடன்—வைராக்கியம் நிறைந்த இந்த முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்!

தம்மை ஆகஸ்ட் 5க்கு முன்னர் விடுதலைசெய்யாவிட்டால் — அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தாவிட்டால் ஆகஸ்ட் 5 இலிருந்து சாகுமவரை உண்ணாவிரதமிருப்பது என்ற இந்த இளைஞர்கள் எடுத்திருக்கின்ற முடிவினைப் பார்க்கும்போது கண்கள் குளமாகின்றன.

இருந்தபோதிலும் — அநியாயமான சட்டங்களையும் அநீதியான நடவடிக்கைகளையும் எதிர்ப்பதும், அச்சட்டங்களுக்கு ஒத்துழைப்புத்தர மறுப்பதுமே ஓர் உண்மையான சத்தியாக்கிரகியின் குறிக்கோளாக இருந்திடவேண்டும் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை!

தன்னைத்தானே வருத்துவதன் மூலம் எதிரியின் மனச்சாட்சியை தூண்டிவிடச்செய்து அதன் மூலம் நியாயத்தை உணரச்செய்வதுதான் சத்தியாக்கிரகியின் பற்றும் போராட்டமுறையாகும்!

அந்த வழியிற்தான்—அக்கிரம வழியிற்செல்லும் அரசுடனும், அது போட்டுள்ள அநீதியான சட்டத்துடன் ஒத்துழைக்க மறுத்து—தம்மைத்தாமே பட்டினி போட்டு வருத்திக்கொள்வதன் மூலம், ஆட்சியாளர்களினதும் மனிதாபிமானம் கொண்ட சிங்கள மக்களினதும், உலகநாடுகளினதும் மனச்சாட்சியை உசுப்பிவிடும் ஆன்மீகப்போராட்டமொன்றில் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் குதிக்கவிருக்கின்றனர்!

சிறைச்சாலையில் இந்த இளைஞர்கள் உண்ணாவிரதம் இருக்கநேர்ந்து அவர்களில் ஒருவருக்காவது ஒரு தீங்கு நேருமாக இருந்தால்—அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்பதை அரசு உணரவேண்டும்!

இதனையுணர்ந்து பிரச்சினையை மேலும் வளரவிடாது சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையில் ஆகஸ்ட ஐந்துக்கு முன்னர் அரசு ஒரு முடிவுக்கு வந்து விடுவது நாட்டுக்கு நல்லது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கொண்டோம். ஆனால் எங்களுக்கு அங்கு நியாயமான உரிமைகள் கிடைக்கவில்லை. என்பதனால் நாம் அதிலிருந்து வெளியேறினோம். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும் அவரது சகாக்களையும் திருப்திப்படுத்தக் கூடிய முறையில் இந்த அரசியல் அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஓரளவுக்கு நிறைவேறியிருக்கும். அப்படியானால் அந்த அரசியல் அமைப்புத் திட்டம் சட்டபூர்வமானதாக அமைந்திருக்கும்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தமிழ் மக்களின் சுயாதிபத்திய, சட்டபூர்வமான உரிமைகளைப் பற்றி சிந்தித்து தயாரிக்கப்பட்டிருந்தால, தமிழ்த் தலைவர்களுடன் கலந்து உருவாக்கப்பட்டிருக்கும், அல்லது தமிழர்களின் சட்டபூர்வமான, உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதாக அமைந்ததாக இருக்கும்.

### பிரிந்து செல்வதற்கு இடமளியுங்கள்

இந்த ஒருதலைப்பட்ச அரசியல் அமைப்புத் திட்டம் சட்டபூர்வமானது என்று கூறி அதன் கீழ் தமிழ் மக்க

# எங்களைப் பிரிந்து செல்வதற்கு இடமளியுங்கள்!

—8-ம் பக்கத் தொடர்

குப்போது ஒரு தமிழ் நாட்டையே சொந்தமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அதனைவிட ஒருபடி கூடிய சுயாதிபத்தியமும் இறைமையும் அரசுரிமையும் சுதந்திரமும் இருக்கின்றன. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்திருக்கும் இலங்கை அரசாங்கம் ஏன் தமிழ் மக்களின் அரசியலுரிமையையும் அங்கீகரிக்கக்கூடாது?

தமிழ் மக்களும் பாரம்பரிய பெருமைக்குரிய இனத்தவர்கள்; அவர்களும் ஆண்ட பரம்பரையினரென்ற உண்மையை உணர்ந்து அரசு நடந்திருந்தால் தமிழ் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பாதிக்க முடியாத முறையில் ஒரு புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருந்திருக்கவேண்டும்

### பயன்படுத்துவதா? தமிழர் இறைமையை தமிழருக்கு எதிராக

1619-ம் ஆண்டு முதல் 1972 மே 22ம் திகதிவரை இலங்கை போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் அரசியல் அதிகாரத்தின் கீழ்தான் இருந்து வந்துள்ளது.

1972ம் ஆண்டு மே 22ம் திகதியன்று இலங்கை பிரிட்டிஷ் குடியரசுடன் கொண்டிருந்த தொடர்பை துண்டித்துக்கொண்டது. அப்போது இலங்கை மக்களின் சுயாதிபத்தியத்திலும் அரசியல் சுதந்திரத்திலும் ஒருவெற்றுநிலை உருவாகியது அதாவது 1619ம் ஆண்டுக்கு முன்னர் இந்நாட்டின் தமிழ் மக்கள் இருந்ததுபோன்று தனித் தமிழ் நாட்டையும் சுயாதிபத்தியத்தையும் சுதந்திரத்தையும் தாமாகவே அடைந்தார்கள். அப்படியான சூழ்நிலையில் இன்றைய ஆட்சியாளர்கள் தனித் தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்களுடன் கூடிப்பேசி அவர்களின் ஒத்துழைப்புடன் அவர்களின் அரசியல் சிந்தனைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக்கூடிய முறையில் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கவேண்டும்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக இந்நாட்டின் தனித் தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களை உதாசீனம்செய்து இப் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினர். தமிழ் மக்களின் மறுக்கமுடியாத இறைமையை தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் பயன்படுத்துவதை நாம் அனுமதிக்கமுடியாது. இதனை தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் அமைப்புத் திட்டமாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

ஐக்கிய முன்னணியின் தமிழ் அபேட்சகர் ஒருவர் கூட தமிழ் பிரதேசத்தில் வெற்றிபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி புதிய அரசிலமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு தமிழர்கள் அரசாங்கத்திற்கு எவ்வித அங்கீகாரத்தையும் வழங்கவில்லை என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் தமிழ் ஈழ நாட்டிலும் இதற்கு மக்களின் அங்கீகாரத்தை பெறக்கூடிய முறையில் நடந்துகொண்டிருக்கவேண்டும்.

### செல்வாவுடன் பேசியிருக்கவேண்டும்

திருமதி சிறீமா பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் சிங்கள மக்களைப்பற்றிப் பேசும் அதிகாரம் படைத்தவர். அதைப் போலவே தமிழ் மக்கள் ஆதரவோடு தமிழர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. செல்வநாயகம் தமிழ் மக்களைப்பற்றிப் பேச உரிமையும் அதிகாரமும் கொண்டவர். எனவே இரண்டு இனங்களின் பெருந்தலைவர்களானவர்கள் ஒரு நாட்டில் வசிக்கும் இரு இன மக்களின் குடியுரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாத முறையில் கூடிப்பேசியே ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும். அதை விடுத்து தனி ஒரு ஆட்சியின், தனி ஒரு இனத் தலைவர் தனது ஆதரவாளர்களோடு கூடி புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவது ஒரு தலைப்பட்சமானது. மற்ற இனத்தின் அதிகார குடியுரிமைகளுக்குப் பங்கம் ஏற்படுத்துவதற்கு ஒப்பானது.

தமிழ் மக்களின் சுயாதிபத்திய உரிமைகளின் வரலாறு பற்றி தெரிந்தும், தனிப்பட்ட ஒரு இனத்தின் அதிகாரத்திற்குட்பட்ட முறையில் புதிய அரசியல் அமைப்புச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து தமிழர் வாதாடுவதில் நியாயமில்லை என்று கூற இயலாது.

### ஒருதலைப்பட்சமான சட்டம்

தமிழ் மக்களின் உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் பங்கம் ஏற்படாத முறையில் சட்டப்படி இரு தலைவர்களும் ஒன்றுபட்டு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்குவது பற்றி அரசு ஆரம்பகாலத்தில் ஆலோசித்து இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு இடமேயில்லை.

நீதி சில்வா:- தமிழ் நாட்டின் தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் இந்த அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருந்தால் அது ஒரு சட்ட பூர்வமான அரசியல் அமைப்புத் திட்டமாகுமா?

திருச்செல்வம்: ஆம் ஐயா! அந்த நோக்கத்துடன்தான் நாம் அரசியல் சட்ட நிர்ணய சபையில் கலந்து

ளின் சுயாதிபத்திய உரிமைகளுக்குக் கட்டுப்பாடு விதிப்பதை திரு. செல்வநாயகமும், தமிழ் பிரதிநிதிகளும் எதிர்த்து செயல்பட்டதாலே இவ்வழக்கு சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. அதுவும் ஒருதலைப்பட்சமாக தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் எங்களையும் அணைத்துக்கொண்டு ஒரு அரசியல் அமைப்புத் திட்டத்தை தயார்ப்பதற்கு இந்த அரசாங்கம் தவறிவிட்டது. எனவே எங்களைப் பிரிந்து செல்வதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும்.'

நீதி. செல்லையா:- 'தமிழ் மக்கள் அரசியல் நிர்ணய சபை மூலம் புதிய அரசியல் அமைபபுத் திட்டத்தை அமைப்பதற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என்று நீங்கள் கூறினீர்கள். அப்படியானால் திரு. செல்வநாயகமும் அவரது சகாக்களும் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு ஆதரவு அளித்திருந்தால் மட்டும் அது சட்டபூர்வமாகிவிட முடியுமா?'

திருச்செல்வம் 'ஆம் ஐயா! திரு. செல்வநாயக

—8-ம்பக்கம் பார்க்க

## ''விடுதலைப் பிரார்த்தனைக் குழு''

ஜெபத்தில் விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள ஜெபவீரர்களே! தாய்மார்களே சகோதர சகோதரிகளே பிள்ளைகளே!

சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவனும் பரம பிதாவும் மனுஷனுக்குக் காட்டிக்கொடுத்த ஒரே ஒரு வழியும், தவறாது வெற்றிதரும் ஆயுதமும், கருவியும், கேடயமுமாகிய ஜெபத்தில் ஒன்றுகூடி ஒன்றுபட்டு ஒரு மனதுடன் ஒரு நோக்குடனும் இயங்கி விடுதலை அடைய முன்வாருங்கள்.

ஒவ்வொரு வீடுகளிலும் கிராமங்களிலும் பட்டணங்களிலும், குழுக்குழுவாயும் தனித்தும் இயங்கி விடுதலையை எமதாக்க, சீர்பட்டு தகுதியடைந்து, எமது தலைவர்களுக்கும் சிறையிலிருக்கும் வாலிபருக்கும் சக்தியும், உறுதியுமூட்டுவோம் திரளுங்கள், ஆயிரக்கணக்கான ஊக்கமுள்ள இயங்கும் தொண்டர்கள் உடன் வேண்டும்.

வேறு சில நாடுகளில் இயங்கும் பிரார்த்தனைக் குழுக்களுடன் தொடர்புள்ள ஊழியனும் தொண்டனுமாகிய என்னுடன் இணைந்து இங்கும் பணியாற்ற தொடர்புகொள்ளவும்.

மே/பா சுதந்திரன் விளம்பரப்பகுதி
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12.

## கிளிநொச்சித்தொகுதி கருத்தரங்குகள்

கிளிநொச்சி தொகுதியில் கிளைகள் அமைக்கும் தொடர் கருத்தரங்குகளில் எதிர்வரும் 19-7-76 திங்கட் கிழமைக்கான கருத்தரங்குகள் வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளன. பிற்பகல் 4மணிக்கு வன்னேரிக்குளம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கி. ச. உறுப்பினர் திரு. ச. பொன்னுச்சாமி தலைமையிலும் பி. 7மணிக்கு ஸ்கந்தபுரத்தில் கி. ச. உறுப்பினர் திரு வீ. கந்தையா தலைமையில் கௌரி அம்மன் கோவிலடியிலும் இவை நிகழும். திரு வீ ஆனந்தசங்கரி பா. உ.வும், கிளிநொச்சிமாவட்ட கூட்டணி இளைஞர்பேரவை கிளைகளின் நிர்வாகிகளும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு, புத்தளம் வரை தமிழர் அரசு பரந்திருந்தது!

—1-ம் பக்கத் தொடர்—

சுயாதிபத்தியமும் சுதந்திரமும் உள்ள மக்களாக ஐ. நா, நிறுவனம் அங்கீகரித்துள்ளது. பாலஸ்தீன மக்களுக்கே இந்த உரிமை இருக்கும் போது, ஒரு தமிழ் நாட்டையே சொந்தமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அதனைவிட ஒருபடி கூடிய சுயாதிபத்தியமும் இறைமையும் அரசுரிமையும், சுதந்திரமும் இருக்கின்றன. ஆகவே வேறொரு நாட்டை-அதாவது சிங்கள நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு எங்களின் அபிலாஷைகளுக்கும் எண்ணங்களுக்கும் விரோதமாக புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கி எம்மீது திணிப்பதற்கு எவ்வித உரிமையுமில்லை.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழ்ஈழ நாட்டுத் தலைவரான திரு. செல்வநாயகம் தன்னுடைய பதவியை ராஜினுமா செய்து மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார். தனிநாடு கோரிப் போராடும்போது — எங்கள் ஜனநாயக உரிமைகளையே பயன்படுத்துகிறோம்.''

இவ்வாறு திரு. திருச்செல்வம் அங்கு சுட்டிக் காட்டினுர்.

*13-7-76, 14-7-76 ஆகிய நாட்களில் நீதிமன்றத்தில் திரு. திருச்செல்வம் நிகழ்த்திய உரை வருமாறு:—*

1947ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை சுதந்திர சட்டத்தின்படி இலங்கைப் பாராளுமன்றம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது. அந்த அரசியலமைப்புத் திட்டத்தின் 29வது ஷரத்து அரசாங்கம் எந்த ஒரு மதத்துக்கு அல்லது இனத்துக்கு சலுகை காட்டுகிற மாதிரியோ அல்லது பாதகம் ஏற்படுத்துகிறமாதிரியோ சட்டமியற்றுவதை தடைசெய்தது.

1964ம் ஆண்டில் லஞ்ச விசாரணைக் கமிஷனருக்கும் ரணசிங்காவுக்குமிடையிலான வழக்கின் அப்பீலை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிரிவிக் கவுன்ஸிலின் நீதியரசர் பியர்ஸ் பிரபு தமது தீர்ப்பில் இலங்கை அரசியல் அமைப்புத் திட்டத்தை எவராலும் மாற்றியமைக்க முடியாது என்று வலியுறுத்தியிருக்கிறார்.

## ஐக்கிய முன்னணிக்கு அதிகாரமில்லை

ஐக்கிய முன்னணிக்கு ஒரு அரசியல் நிர்ணய சபையை அமைக்க பொதுமக்கள் அங்கீகாரம் அளித்ததாகவும் அதனுல்தான் பிரதமர் அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கினுர் என்றும் கூறப்படும் வாதத்தில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனெனில் 1970 பொதுத்தேர்தலில் ஐக்கிய முன்னணிக் கட்சிகளுக்கு பொதுமக்கள் வழங்கிய வாக்குகளைவிட எதிர்க்கட்சிகளுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன.

அந்தப்பொதுத்தேர்தலில் ஆகமொத்தம் 49 லட்சத்து 49,616 வாக்குகள் அளிக்கப்பட்டன. அவற்றில் ஐக்கிய முன்னணி கட்சிகளுக்கு 24 லட்சத்து 15 302 வாக்குகளும் எதிர்க்கட்சிகளுக்கு 25 லட்சத்து 34 314 வாக்குகளும் கிடைத்தன.

எனவே இப்புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு பக்கள ஐக்கிய முன்னணிக்கு எவ்வித அதிகாரமும் வழங்கவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இந்திய அரசியல் திட்டத்தை தயாரித்த அரசியல் நிர்ணய சபைக்கு இருந்தது போல் இங்கு அரசியல் திட்டத்தை தயாரித்த அரசியல் நிர்ணய சபைக்கு சட்டபூர்வமான அதிகாரம் இருக்கவில்லை. இந்திய சுதந்திர சட்டத்தின்கீழ் இந்திய அரசியல் நிர்ணயசபைக்கு சட்டபூர்வமான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனுல் இன்றைய புதிய அரசியல் அமைப்புத்திட்டம் எவ்வித சட்டபூர்வமான அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை.

இந்தப் புதிய அரசியல் அமைப்புத்திட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கின்றபோதிலும் அது செயல்படுத்தப்படவில்லை. இந்தப் புதிய அரசியல் அமைப்புத்திட்டம் ஒரு கேலிக்கூத்தாகும்.

## தமிழ் ஈழம் தனி அரசு

புதிய அரசியல் அமைப்பு திட்டத்தை உருவாக்கிய போது தமிழரசுக்கட்சி அதில் கலந்துகொண்டு தமிழ் மக்களுக்கு நியாயமான சலுகைகளையும் சம உரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முனைந்தது. ஆனுல் அதற்கு ஆட்சியாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காதமையினுல் அரசியல் நிர்ணய சபையில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியது.

நவீன காலத்து அந்நிய ஆக்கிரமிப்புக்கு முன் யாழ்ப்பாணம் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட ஒரு முடியரசாக இருந்தது 13ம் நூற்றாண்டில் இருந்து 1619ம் ஆண்டுவரை யாழ்ப்பாண முடியரசு சுதந்திர நாடாக இருந்தது.

1619ல் தான் யாழ்ப்பாண முடியரசு வீழ்ச்சியடைந்தது. அந்த முடியரசு யாழ்ப்பாணம் முதல் தெற்கில் புத்தளம் வரைக்கும் கிழக்கில் கிழக்கு மாகாணம் முழுவதுக்கும் பரந்திருந்தது. இந்த ராஜ்யத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கென்று ஒரு தனியான மொழியையும் கலாசாரத்தையும் மதத்தையும் கொண்டிருந்தார்கள். 1833ம் ஆண்டில்தான் முதல் தடவையாக தமிழ் ராஜ்யமும் சிங்கள ராஜ்யமும் மக்களின் விருப்பத்தைப் பெறாமலே ஆங்கிலேய அரசினுல் தமது வசதிக்காக ஒன்றிணைக்கப்பட்டன. அதுவரை தமிழ் ராஜ்யமானது போர்த்துக்கீஸர் காலத்திலும் சரி ஒல்லாந்தர் காலத்திலும் சரி சிங்கள ராஜ்யத்தை விட வேருன அரசு அதிகாரிகளினுல் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறு கூறிய திருச்செல்வம் இக் கட்டத்தில் 1833ம் ஆண்டில் வரையப்பட்ட இலங்கைப் படத்தை நீதிபதிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இந்நாட்டை பாரம்பரியமாகக்கொண்ட தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாகவும், பூகோளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தனியான ஒரு தேசிய இனம் என்பதற்குச் சான்ருக திரு. திருச்செல்வம், போர்த்துக்கீஸர் காலம் முதல் எழுதப்பட்டுள்ள பல சரித்திர நூல்களை சான்றுகாட்டி வாதாடினுர்.

## இரண்டு நாடுகள் கொண்டது இலங்கை

*அவர் தொடர்ந்து கூறியதாவது!*

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது எமது மூதாதையர்களான தமிழ் மக்கள் தங்களது உரிமைகள் மீது ஆதிக்கம் செலுத்தும் அந்நிய ஆட்சிக்குட்பட்டிருக்கவில்லை தங்களது உரிமைகளை தாங்களே நிர்ணயித்துக்கொள்ளவும் தங்களைத் தாங்களே ஆளவும் அவர்களுக்கு வாய்ப்பிருந்தது சிங்களவர் மீது தமிழர் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது தமிழர் மீது சிங்களவர் ஆதிக்கம் செலுத்தவோ வேண்டிய அவசியமும் ஒரு இனத்தவர் உரிமையில் வேறு இனத்தவர் தலையிடவேண்டிய நிலையுமிருக்கவில்லை.

ஆகவே இலங்கை ஒரு நாடாகக் காணப்பட்டாலும் அது இரு இன மக்களைக் கொண்ட இரண்டு நாடுகளாகும் என்பதே உண்மை நிலையாகும்.

சுதந்திர இலங்கையிலும் கூட ஆரம்பத்தில் மலையகத் தமிழர்களின் பிரதிநிதியாக மக்கள் சபையில் எட்டுப் பேர் இருந்தனர். இன்றைய நிலையில் ... [illegible] ... துவம்தான் அதிகரித்துள்ளது.

## சுயநிர்ணய உரிமை கோரிக்கை

ஆரம்பகாலம் தொட்டே தமிழரும் சிங்களவரும் இந்நாட்டில் நேசமுடன் வாழ்வதற்கான கோரிக்கைகள், பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. சுயநிர்ணய உரிமைபற்றி 1947 முதல் இன்றுவரை தமிழரசுக்கட்சியாக இருந்தும், தமிழர் கூட்டணியாக இருந்தும், தற்போது தமிழர் விடுதலை முன்னணியாக இருந்தும், தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

பண்டைய வரலாற்று ஆதாரக் கருத்துகளையே கவிழ்த்துவிட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தமிழர்கள் ஏற்கவில்லை. இதைப் பாராளுமன்றத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1972ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் திகதி அறிவித்தார். தன்னுடைய உறுப்பினர் பதவியை ராஜினுமாச் செய்து, அரசுடன் போட்டியிட்டு, வென்று புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்கவில்லை என்பதையும் தமிழர்கள் தனிநாடு கோருகிருர்கள் என்பதையும் அவர் நிரூபித்துள்ளார்!

இந்த நிலையில் இவ்வளவு ஆதாரங்களை சரித்திரபூர்வ சாட்சியங்களுடன் தெளிய வைத்திருக்கும்போது தமிழர்கள் ஏற்காத அல்லது அங்கீகாரம் செய்யாத அரசியல் அமைப்புச் சட்டத்தைக்கொண்டு அமைக்கப்பட்ட இந்த நீதிமன்ற அமைப்பை நாம் எதிர்க்கிறோம்.

## அதிகாரமில்லை

இது ஒரு முக்கிய வழக்கு. இவ்வழக்கு எதிர்க்குமாருக தீர்க்கப்படடால், அதனுல் பல பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இதனுல் அரசாங்கம் உற்சாகமடைந்து அவசரகாலச் சட்டத்தின் மூலம் நாட்டுமக்களைமேலும் கொடுமைப்படுத்தும் என்பது நிச்சயம்;

தமிழ்நாடு, சிங்கள நாடு ஆகிய இரு நாடுகளைக் கொண்ட இலங்கையில் வாழும் தமிழ் நாட்டு மக்களாகிய தமிழர்கள் சுயாதிபத்தியம் கொண்டவர்கள். தமிழர்களை சுயாதிபத்தியமும் சுதந்திரமும்கொண்ட மக்களாக ஐ. நா. ஸ்தாபனமே மதித்து வருகிறது.

அரசியல் நிர்ணய சபையின் மூலம் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க இவ்வரசுக்கு அதிகாரமில்லை, பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு அரசு அமைக்கப்பட்டதாகக் கூறப்படுவதிலும் நியாயமில்லை.

1970 ஜூலை 19ல் நடந்த மக்கள் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் பிரதமர் திரிமா பண்டாரநாயகா சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரத்தோடு புதிய அரசியலமைப்புத்திட்டம் அமைக்கப்படவிருப்பதாக கூறினுர். ஆனுல் அந்தப் பிரதிநிதிகள் யாவரும் பழைய சோல்பரிச் சட்டப்படியே தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதைக் கவனிக்கவேண்டும்.

## பாலஸ்தீனமும் தமிழ் ஈழமும்

பாலஸ்தீன விடுதலைஇயக்கத்தில அங்கத்துவம்பெறும் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு நாடு இல்லாத போதிலும் அவர்களைச் சுயாதிபத்தியமும் சுதந்திரமும் உள்ள மக்களாக ஐ நா. ஸ்தாபனம் அங்கீகரித்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அப்படியான சூழ்நிலையில் ஒருநாட்டையே சொந்தமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கும் இந்த உரிமை நிச்சயமாக இருக்கிறது. ஆகவே வேறொரு நாட்டைச்சேர்ந்தவர்களுக்கு எங்களின் அபிலாஷைகளுக்கும் எண்ணங்களுக்கும் விரோதமாக புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கி எம் மீது திணிப்பதற்கு எவ்வித உரிமையுமில்லை.

'பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கத்துவம் பெறும் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு நாடு இல்லாத போதிலும் அவர்களை சுயாதிபத்தியமும் சுதந்திரமும் உள்ள மக்களாக ஐ. நா. ஸ்தாபனம் அங்கீகரித்துள்ளது. பாலஸ்தீன மக்களுக்கே இந்த உரிமை இருக்

—4-ம் பக்கம் பார்க்க

## வழக்கு நிதி சேகரிக்க முடிவு!

தற்போது தமிழ்த் தலைவர்கள் நால்வருக்கு எதிராக நடைபெறும் வழக்கில், தமிழ்த் தலைவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் அனைவரும் ஊதியமின்றி இலவசமாகவே பேசுகிருர்கள், ஆயினும் வழக்கின் ஏனைய செலவுகளுக்கும், எதிர்காலத்தில் நீதிமன்றத்துக்கு வரக்கூடிய வழக்குகளுக்குமாக, தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கு நிதியொன்றை தொடங்க முடிவுசெய்துள்ளது;

இந்நிதியை திரட்டுவதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையினரும் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினரும் ஈடுபடவிருக்கிருர்கள்!


## பரந்தனில் ஓர் விவசாய சேவை

விவசாயிகட்கு வேண்டிய உரம் மருந்து வகைகளை நிதான விலைகளில் தரமான பொருட்கள் விநியோகம் செய்பவர்கள்:

**தருமராசா ஸ்தாபனம்**

கண்டி வீதி, பரந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒவ்வொரு தமிழனின் ஆத்மாவிலிருந்தும் விடுதலை வேட்கை பொங்கியெழ வேண்டும்!"

## இயக்கத்துக்கு என்ன செய்தோம் என ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கவேண்டும்!

### கொழும்பில் நாவலர் அமிர்தலிங்கம் முழக்கம்!

**"தமிழ் தேசிய இனம் நடத்துகின்ற விடுதலைப்போராட்டத்திலே ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழச்சிக்கும் பங்கு உண்டு. இந்த இயக்கத்தில் பார்வையாளர்களாகவல்ல — பங்காளர்களாக ஒவ்வொருவரும் மாறவேண்டும். தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்பதை விடுத்து நாம் ஒவ்வொருவரும் இந்த தூய்மையான இயககத்துக்காக என்ன செய்தோம் என்று தம்மைத்தாமே கேட்டுப்பார்க்கவேண்டும். தலைவர்கள் என்பவர்கள் ஏதோ வானத்திலிருந்து திடீரென இறங்கிப் பூமிக்கு வந்தவர்களோ—அல்லது மக்கள் மத்தியிலே வலுக்கட்டாயமாக திணிக்கப்படக்கூடியவர்களோ அல்ல; எவன் துணிவுடன் இயக்கத்துக்கு தன்னை அர்ப்பணித்து, விடுதலைப்போராட்டக்களத்தில் முன்னணியில் செல்கிறானோ அவனே தலைவன்; அப்படிச்செல்லாதவர்கள் தலைவர்கள் அல்ல."**

—இவ்வாறு கொழும்பு—பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் தமிழ் இளைஞர்பேரவையின் கொழும்புக்கிளையினரால் 12-7-76 நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பேசும்போது தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு திரு. ஆ. சுருபதிபாலசிறீதரன் தலைமை தாங்கிப்பேசுகையில்—சிறைச்சாலையில் எம் உடன் பிறப்புக்கள் ஆகஸ்ட் 5 முதல் சாகும்வரை உண்ணு விரதம் இருக்கத் தீர்மானித்து விட்டதாகவும், இந்த இளைஞர்களை விடுதலைசெய்யாமல், சிறைச்சாலையில் அவர்களை அரசு சாகடிக்குமானால் தமிழ் இளைஞர்கள் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி கட்டுப்பாட்டின் கீழ் தமிழ் இளைஞர்கள் பொங்கியெழுந்து போராடியே தீருவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், தமிழ் மக்களின் உரிமைகள் யாவும் வழங்கப்பட்டுவிட்டதாக இதுவரை கூறிவந்த குமாரசூரியரும், ஏனைய சிங்கள அரசின் ஆதரவாளர்களும், கடந்த 25 ஆண்டுகளாக இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லையென்பதை இப்போதுதான் உணருவதுபோலப்பாசாங்கு செய்வதாகவும், பகைவனின் பின்னே சென்று இரப்பதிலும் பார்க்க அழிந்து போவதுபெருமைப்படத்தக்கதென்றும், தமிழ் ஈழம் அமைக்கும் முடிவு மாற்ற முடியாதது என்றும் அறத்தின் துணைகொண்டு நாம் நடத்தும் போராட்டத்தில் இறுதிவெற்றி அறத்துக்கேயென்றும் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி பா. உ. வி. என் நவரத்தினம் பேசுகையில், இருபது அம்சமல்ல—40 அம்சம் வந்தாலும், தமிழன் ஆளப்படும் இனம் என்ற நிலைமாறுமட்டும் தமிழினத்தின் அடிமை நிலை மாறாதென்றும், தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டும் என்கிற உறுதியை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், இந்த உறுதியை வளர்த்துக்கொண்டால் விடுதலை நிச்சயமானது என்றும் குறிப்பிட்டார்.

திரு. க. துரைரத்தினம் பேசுகையில்—சிங்கள ஆட்சியில் இன்றைய அரசு மாறி ஐ. தே. க. அரசு வந்தால் ஏதோ தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமென்று சிலர் பிரசாரம் செய்யத்தொடங்கியிருப்பதாகவும், இன்றைய சிறீலங்கா சுதந்திரக்கட்சி சீறிக்கடிக்கும் நாகம் போன்றது; ஐ. தே. க. யோ சீறுமல், சத்தமின்றிக் கடிக்கும் நாகம் போன்றது; ஆகவே சிறீலங்கா கட்சியைவிட ஐ. தே. க. ஆபத்துக்கூடியது என்றும், தமிழினம் எந்தச் சிங்கள ஆட்சியையும் ஏற்றுக்கொள்ளாது, தனது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

திருமதி அமிர்தலிங்கம் பேசுகையில் — சிறைச்சாலைகளில் நம் தம்பியர் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும்போது, நாம் வெளியில் பொங்கியெழுந்து போராடுவோம் என்று அறிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் தமது பேச்சில் கூறியதாவது:—

தமிழினத்தின் அரசியல் வாழ்வில் கடந்த கால்நூற்றாண்டுகாலமாக நாம் பல முடிவுகளை எடுத்திருக்கிறோம்; பின்னர் அவற்றில் சிலவற்றை மாற்றியுமிருக்கிறோம்; சிலவற்றை கைவிட்டுமிருக்கிறோம். ஆனால் இன்று வட்டுக்கோட்டை மாநாட்டில் எடுத்த தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்பது என்ற முடிவு இறுதியானது; இனத்தின் சரித்திரத்தில் மாற்றமுடியாதது ஆகும்.

1972ம் ஆண்டு மே 14ம் நாள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்பதற்காக தோன்றிய தமிழர் கூட்டணி, 1976ம் ஆண்டு மே14ம் திகதி வட்டுக்கோட்டை மாநாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறி, தமிழ் ஈழ விடுதலையொன்றையே தனது இலட்சியமாக பிரகடனப்படுத்தி விட்டது. இந்த இலட்சியத்தின் அடிப்படையில் தமிழ்மக்கள் இன்று ஒன்றுபட்டுவிட்டனர்.

இன்று ஐ. தே. க. ஆட்சி வந்தால், தமிழர் பிரச்சினை [illegible] [illegible]கள். ஏதோ தமிழ் மக்களுக்கு 1970ம் ஆண்டுக்குப் பின்னர்தான் தொல்லைகள் ஏற்பட்டதுபோலவும், அதற்கு முன்னர் எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தது போலவும் சிலர் மாய்மாலம் பேசுகிறார்கள். கடந்த கால் நூற்றாண்டு வரலாற்றை தமிழினம் மறந்துவிடவில்லை;

1948 முதல் 1956வரை ஐ. தே க. ஆட்சிதான் இருந்தது; அப்பனும் மகனும் மருமகனும் தான் எட்டு ஆண்டுகளாக ஆண்டார்கள்; அவர்களது ஆட்சிக்காலத்திலேதான், பத்து இலட்சம் மலையகத் தமிழர்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்டது; தமிழ் மக்களில் சரி அரைவாசிப்பேர் நாடற்றவராக்கப்பட்டனர்; மலையகத்தில் தமிழ் மக்களுக்கிருந்த எட்டுப் பிரதிநிதித்துவம், அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு, சிங்களவருக்கு வழங்கப்பட்ட கொடுமை யூ. என்பி. ஆட்சியில்தான் நடந்தது.

இதுமட்டுமன்றி, தமிழ் ஈழத்தில் சிங்களவரை திட்டமிட்டு குடியேற்றி, தமிழ் ஈழத்திலேயே — தமிழ் பேசும் மக்களின் தாயகத்திலேயே — தமிழ்பேசும் மக்களை சிறுபான்மையாக்கும் சூழ்ச்சித் திட்டத்தை வகுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே. கந்தளாய், அல்லை, அம்பாறை போன்ற இடங்களில் சிங்களவரைக் குடியேற்றி, தமிழ் பேசும் மக்களின் நிலத்தில சரி அரைவாசியைப் பறித்ததனால் தான், அம்பாறை எனும் சிங்களத்தொகுதி அன்று உருவாயிற்று 'சேருவாவில' எனும் சிங்களத்தொகுதி இன்று உருவாயிற்று.

அடுத்து எட்டு ஆண்டுகள், புருஷனும் மனைவியும் ஆண்டார்கள்—1956 முதல் 1964 வரை. இந்தக் காலத்தில்—அதாவது பண்டாரநாயகா குடும்பத்தில் ஆட்சிக்காலத்தில் சிங்களம் மட்டும் சட்டம் வந்து தமிழனை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளியது. யூ. என். பி. தமிழனுக்கு எதிராக ஆரம்பித்த வேலைகளை பண்டாரநாயகா ஆட்சி பவ்வியமாக செய்துமுடித்தது. தொடர்ந்து 1965 முதல் 1970 வரை ஆட்சிக் கட்டிலில் இருந்த யூன். என். பி. தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை புறக்கணித்து தமிழர்களை அவமதித்தது. தமிழரசுக் கட்சியின் வற்புறுத்தலினால் 1966ல் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி சட்டத்தை 1970வரை — அதாவது ஆட்சிக்கட்டிலில் இருக்கும்வரை அமுல்படுத்தாமல், தமிழ் மக்களுக்கு துரோகம்செய்த கட்சி யூ. என. பி.க் கட்சியே.

1970ம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழினத்தை ஒரேயடியாக அழித்தொழிப்பதற்காக எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, தமிழன் தலையில் பாறுங்கல்லைப் போடுவதுபோன்ற புதிய அரசியல் சட்டத்தையெழுதி தமிழினத்தை அடிமையாக்கியது. இதன் பின்னர்தான் சமஷ்டி அரசியல் கேட்ட நாமும் ஒற்றையாட்சி பேசிய தமிழ் காங்கிரசும் எங்கோ தனியாக நின்று தனிநாடு பேசியவர்களும் ஒன்றாக இணைந்து இன்றைக்கு ஒரே முடிவுக்கு வந்து. தமிழ் ஈழத்தை மீட்கும் விடுதலைப்போராட்டத்தை நடத்துகிறோம்.

இந்த விடுதலைப்போராட்டம் தனியே சிலருக்கு உரியதல்ல. இதில் ஒவ்வொரு தமிழனுக்கும், தமிழச்சிக்கும் பங்கு உண்டு. சுதந்திர வேட்கை ஒவ்வொரு தமிழனின் ஆத்மாவிலிருந்தும் பீறிட்டுப் பொங்கி யெழ வேண்டும்"

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேசினார். கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தார்கள்; மண்டபம் நிரம்பிவழிந்தது. கூட்டத்துக்கு வந்தவர்கள் ஆளுக்கு ரூபா 1-00 நன்கொடை கொடுத்தே வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



---

## சிங்களக் கட்சி...

—2-ம் பக்கத் தொடர்

அன்று இரவு கவியரங்கு இடம்பெற்றது. கவியரங்கில் திருவாளர்கள் திருமலைக் கவிராயர், பூனகர் மரியதாஸ், மதுரநாயகம், வணங்காமுடி, மு. இ. யோகேந்திரன் திருமதிபிலோமினா லோறன்ஸ், ஆகியோர் உணர்ச்சியும் எழுச்சியும் நிறைந்த கவிதைகளைப்படித்தனர்.

---

## திருக்கேதீச்சர குடமுழுக்கு நினைவுமலர்!

திருக்கேதீச்சர குடமுழுக்கு விழா நினைவாக மில்க்வைற் சவர்க்காரத்தொழிலக உரிமையாளரான சிவநெறிப் புலவர் திரு. க. கனகராசா அவர்கள், நினைவு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்நூலை அ. சி. குலரத்தினம் ஆக்கியுள்ளார். நூலில், கேதீச்சர ஆலயத்தின் வரலாறு தரப்பட்டுள்ளது. அத்துடன் கேதீச்சரநாதர் மீது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய இருவரும் பாடியுள்ள பதிகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

---


ஈழத்து இளம் எழுத்தாளர்
ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க
ஓர்
இளம் கதாசிரியையின் படைப்பு!

செல்வி "மண்டூர் அசோகா"வின்

"கொன்றைப் பூக்கள்"

(பத்துச் சிறுகதைகள்)


வாசகர்களினதும் விமர்சகர்களினதும்
பெரும் பாராட்டுகளைப் பெற்றது.
கவர்ச்சி அட்டையுடன் 176 பக்கங்கள்
தனிப்பிரதி: 4/75 தபாலில்பெற ரூபா 5/25
விற்பனைக்கு 15 % கழிவு
விபரங்கட்கு:

தாய்நாடு பதிப்பகம்

80 1/4 பிறைஸ் பிளேஸ், கொழும்பு-12.
தொலைபேசி: 27197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறிந்த பெரும்புலவர் வடமொழிக்குக் கால்வருடிக் கிடந்திட்ட மடமை கண்டு நற்றமிழைத் தனித்தமிழை எழுதிப்பேசி தமிழ் மக்களின் நல்லுணர்வை வளர்த்து ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் மறைமலையடிகளார். தன்னைப்பெற்றெடுத்த தமிழ் நாட்டில் அறத்தைப் பண்பைப் பாதுகாத்து பெரும் புகழை நிலைநாட்டி மறைந்தும் மறையாதபெருமகனாய் விளங்குபவர் மறைமலையடிகளார். அதனால்தான் தமிழகத்தில் மட்டுமல்ல கடல்கடந்த மலேசியாவிலும் ஈழத்திலும் அவர் புகழ் பரவியுள்ளது.




அடிகள் ஆற்றிய பணி காலத்தாற்சாகாது ஞாலத்தில் நிலைத்து நிற்கும் பணியாகும். இப்பெருண்மையை முனைவர் (டாக்டர்) மு. வ. பின்வருமாறு உள்ளம் தொடும் முறையில் எடுத்துரைக்கிறார். 'தமிழ்த் தந்தை மறைமலையடிகள் செய்துள்ள தொண்டு குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு உரியதொண்டு அன்று. தமிழின் நிகழ் காலத்திற்கும், எதிர்காலத்திற்குமான நெடிது நின்றும் பயன்தரும் தொண்டு செய்துள்ளார். அடிகள் தமிழ் மெல்ல

சு. துரைசாமிப்பிள்ளை செப்பும் பின்வரும் செம்மை சான்றமொழிகள் தமிழ் ஆராய்ச்சி உலகில் அடிகள் பெற்றிருந்த உன்னத நிலையை இனிது எடுத்து இயம்பும்.

இதோ அவர் மொழிந்தவை "தமிழ் இலக்கியங்களில்காலம் பொருள்முதலியவற்றை ஆராயும் முறை ஆங்கில நாட்டு முறையை அடியொற்றிவருவதொன்று. காலம் பற்றியும் ஒப்புமை பற்றியும் ஆராய்ச்சி நிகழும். இதனை முதற்கண்

வழி நின்று உழைக்கும் எத்தனையோ தமிழ் இளைஞர்கட்கு ஒரு புதிய துணிவை— ஒரு புத்துயிரை ஏற்படுத்தியுள்ளது. இதனை நனகுணர்ந்த தமிழகத்தின் முன்னைய கல்வி அமைச்சராக விளங்கும் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தனக்கேயுரிய வீறுநடையில் பின்வருமாறு இனிது இயம்புகின்றார்.

அவர் கருத்தினையும் செவிமடுப்போம். இதே அவர் உரைத்தவை "மறைமலையடிகள் மூட்டிய கனல் திக்

● மறைமலையடிகள் நூற்றுண்டு விழா சிறப்பிதழ்:

# மறைமலையென்னும் தமிழ் மலை

# தமிழனைத் தமிழனாக்கிய மாமேதை!

மெல்ல மணிப்பிரவாள மொழியாக மாற இருந்த தறுவாயில் தன் செம்மையும் சிதைவுறநேர்ந்தநெருக்கடியான நிலையில் அதற்கு உறுதுணையாக முன்நின்று தனித்தமிழ் இயக்கம்தோற்றுவித்து வளர்த்த பெருந்தொண்டு அவர் ஆற்றியதாகும். இனித் தமிழ்மொழி தலைநிமிர்ந்து வாழும் என்று நம்பக்கூடிய நிலையில் தமிழை வாழவைத்த பெருமை அவரைச்சார்ந்ததாகும். எதிர்கால மொழிவரலாற்றில் இந்த அரியதொண்டு பொன்போல்போற்றப்படும் இதை உணர்ந்ததால்தான் அடிகளைப் பிரிந்த பிரிவு ஆற்றொணுதபிரிவு என்பது உணரப்படும்" அடிகள் மறைந்து 26 ஆண்டுகள் கழிகின்ற நிலையிலும் இச் சொற்றொடர்களைப் படிக்கும்போது நம்மையறியாமலே கண்களில் நீர் பெருகத்தான் செய்கின்றது.

தமிழ் இலக்கியத் துறையுட் புகுத்தி இனிய உரையில் எழுதிக்காட்டிய பெருமை அடிகளுக்கே உரித்தாகும். இவ் ஆராய்ச்சிக்கு நாட்டின் சமய, சமுதாய அரசியல் வரலாறுபற்றி அறிவு அடிப்படையாக வேண்டுவதொன்று. இதனைத் தமிழ் வகையில ஆராய்ந்து தமிழ் நாட்டு மக்களின் அரசியல், மொழி, சமயம், ஒழுக்கம் முதலியவற்றின் வரலாறுகளை ஆராய்ந்து அடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் எழுதிய கட்டுரைகளும் பலவாகும். மாணிக்கவாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும் என்ற பெயர் பெற்ற உரைநூல் மாணிக்கவாசகரை பொருளாகக் கொண்டு எழுந்ததெனினும் அதன்கண் தம நூல்கள் பலவற்றின் காலமும கருத்தும் ஆராய்ந்துகாட்டி அறிஞர் பலரை அத்துறையில் ஈடுபட்டு சிறப்புறச் செய்த வகையில் அடிகள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிநெறித் தந்தையாகின்றார்.

கெட்டும் பரவியதைக் காண்கின்றோம். இந்நாட்டில் எத்தனையோ பெரியவர்கள் தோன்றினார்கள்— னர். அந்த சாகாத் தலைமுறையைச் சேர்ந்தவர் தான் மறைமலையடிகள். நாட்டிலே நல்ல தமிழ் நட

---

தனித் தமிழியக்கத்தின் தந்தை மறைமலையடிகளின் நூற்றுண்டு விழா யூலை 15 முதல் தமிழ்[கூறும் நல்லுலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அடிகளின் நூற்றுண்டு நிறைவையொட்டி ஈழத்தமிம் எழுத்தாளர் பேரவை, கொழும்பு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 17 7.76 சனிக்கிழமை விழாவெடுத்துப் பெருமைகொள்ளுகிறது. அடிகளாரைப் பற்றிய கட்டுரைகள் இந்தப் பக்கத்தில் இடம் பெறுகின்றன. —ஆர்.

---

தோன்றுகிறார்கள். ஆனால் ஒருசிலர் தாம் சாகாத் கலைமுறையாகத் திகழ்கின்ற மாடச் செய்தவர் அவர். அழகு தமிழ் விளங்கச் செய்தவர் அவர், அடிகள் யாருக்

கும் அஞ்சாமல் இழித்துட் பழித்தும் கூறுபவரைக் கண்டு சிறிதும் பின்வாங்காமல் புலவர்கட்கெல்லாம் எடுத்துக் காட்டாக — வழிகாட்டியாக விளங்கியவர்: அவர்தம் கருத்தைக் கட்டிக் காக்க அரண் அமைத்துக் கொண்டார். இறுதியில் வெற்றியும் பெற்றார். அவர் காட்டிய வழியில்தான் இன்றைய புலவர் உலகம் செல்கின்றது. பிறமொழியில் இருந்த என் பெயரைத் தூக்கியெறிந்துவிட்டு நல்ல தமிழில் வேறு பெயரை வைத்துக் கொண்டேன்; அப்பொழுது என்னைக் கேலியும் கிண்டலும் செய்தவர் பலருண்டு. அப்பொழுதெல்லாம் மறைமலையடிகள் ஊட்டிய உணர்ச்சிதான் எனக்கு ஊக்கத்தையும் உறுதியையும் அளித்தது. அவர் அன்று விதைத்த விதை பூத்துக் காய்த்துக் கனியாகி இன்று பலன் கிடைக்கும் நிலையில் உள்ளது."

மேற்குறித்த இக்கூற்று இன்றைய தமிழகத்தின் மொழிக்கொள்கையை உருவாக்கிய ஆழ்ந்த அகன்ற புலமையுடைய முன்னாள் அமைச்சரின் கூற்றாகும். ஏன் அவரின் முடிந்த முடிபுமாகும். இதற்குமேல் எம்மவர் எடுத்து இயம்புவதற்கு என்னதான் உண்டு.

### தலைசிறந்த ஆய்வாளர்

தனித் தமிழ் இயக்கம் அடிகளின் உயிர் மூச்சென்றாலும் அவரின் அளப்பெரிய பெருமைக்கு அது ஒரு எல்லைக்கோடாக அமையக் கூடாது. அவர் தமிழ் இலக்கிய நெறித்தந்தையாகவும் விளங்கினார் என்பதை யாம் மறக்கமுடியாது. தமிழ் இலக்கியத்துறை ஆய்வில் தனக்கெனத் தனியிடம் பெற்றுவிளங்கும் ஔவை

### நாவலர் இயம்பியவை:

அடிகள் தன் கொள்கையில் கொண்டிருந்த பற்று எல்லையற்றது. அதனைத் தன் கொள்கையை நிலைநாட்ட காட்டிய அஞ்சாமை வியப்பினைத்தருவது. அவரின் ஆழ்ந்த புலமையில் ஊறிய அஞ்சாமை அவருக்கு மட்டும வெற்றியை ஈட்டித்தரவில்லை. அவரின் கொளகை

# தமிழ்வானத்தின் தூய திங்கள்

## மலைமலையடிகளைப் பற்றி திரு. வி. க.

"1910ம் ஆண்டில் சிந்தாத்தரிப் பேட்டையில் வேதாசலரின் சொல்லமிழ்தைப் பருகும் தவமுடையனானேன். அவருடைய தமிழுடலும் தமிழுரையும் தமிழ்க்குரலும் தமிழ்ப்பொருளும் என்னை அவர் தம் தோழனாக்கின; தொண்டனாக்கின.

முன்னாளில் மறைமலையடிகள் அடிக்கடி இராயப் பேட்டை குானந்த நிலையத்தில் தங்குவர். அடிகட்கு எல்லாப்பணிகளையும் செய்ய யானே முந்துவன். மற்றவரும் போட்டியிடுவர். சங்க நூல்களில் எனக்குற்ற ஐயங்களை அடிகளிடம் வெளியிடுவேன். அடிகள் படுக்கையில் கிடந்து கொண்டே ஐயங்களைக் களைவர். வேறுபல பேச்சுக்களும் எங்களிடை நிகழும்... தமிழ் வானத்தில் ஒரு தூய திங்களென அடிகள் திகழ்ந்ததைக்கண்டேன்... 'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கு அடிகளின் வாழ்க்கை ஓரிலக்கியம்......

மறைமலையடிகள் யார்?... அன்றைய நக்கீரனும் பிற்றைச் சிவஞானமுனிவரனும் ஒருருக்கொண்டு வேதாசலனாரகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கின்றார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனார் தமிழ் — செந்தமிழ்— சங்கத்தமிழ் என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவுஞ் செய்தது.

இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ் நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனார்க்குண்டு என்று அறுதியிட்டுக் கூறுவேன். அவர் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்; வடமொழியுந் தெரிந்தவர். ...யான் கல்லூரியிலிருந்து அரசியலில் (சுதந்தரப் போராட்டம்) தலைப்பட்டதை மறைமலையடிகள் ஆதரித்தாரில்லை, என்னைக் கடிந்தும் பேசினர். தமிழ்ப் புலவர்களில் என்னைக் கடிந்து பேசுவோர் ஒருவர் இருக்கின்றாரெனில் அவர் மறைமலையடிகளேயாவர்......அடிகள்.

திருஞான சம்பந்தரைத் தமது ஆருயிராகக் கொண்டவர்; அவர் தமிழில் மூழ்கியவர்...... மறைமலையடிகளிடத்தில் பல நல்லியல்புகள் உண்டு. அவைகளில் சிறந்த ஒன்று இரக்கம், — ஜீவகாருண்யம்......"

— மறைமலை அடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசு எழுதிய "மறைமலையடிகள் வரலாறு" என்ற நூலிலிருந்து.—

# மறைமலையடிகளாரைப் பற்றிய ஆய்வுக்கு லண்டன் பல்கலைக் கழகத்தின் 'டாக்டர்' பட்டம்

மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றுண்டு விழா நிகழவிருக்கும் இவ்வாண்டில் அவரைப்பற்றிய ஆய்வுக்கு இலண்டன் பல்கலைக் கழகம் பீ எச். டி. பட்டம் வழங்கியுள்ளது மகிழ்ச்சிக்குரியது அதனையும் அடிகளாரின் இளைய மகள் வயிற்றுப்பேரனுன திரு. ஆ. நம்பியாரூரான் எம். ஏ. பெற்றிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சிக்குரியதாம் இவர் திருவாளர் குஞ்சிதபாதம்பிள்ளை திரிபுரசுந்தரியம்மையார் பெற்றெடுத்த பெருஞ்செல்வத் திருமகனாவர்.

திரு. நம்பியாரூரான் சென்னைக் கிருத்தவக் கல்லூரியில் பயின்று வரலாற்றுத்துறையில் எம். ஏ. பட்டம் பெற்றார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் "சேக்கிழார்" பற்றிய ஆய்வுக்கு எம் லிட். பட்டம் பெற்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்றுத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த நிலையில் இவருக்கு பொதுநலவாய நாடு (காமன்வெல்த்) கல்வித் துறைப்பணியாளர் உதவித்தொகை கிடைத்தது. அதன் உதவியால் இலண்டன் [illegible] கீழ்த்திசை ஆப்பிரிக்கக் கல்விப் பள்ளியில் வரலா[illegible] ஆய்வு மேற்கொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது;

# தமிழர் கூட்டணி தலைவர்களின் செய்தி உண்மையற்றதாம்!

## சுதந்திரனுக்கு எதிராக முறைப்பாடு!

கடந்த 1975 ஆகஸ்டில் மட்டக்களப்பில் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆண்டுக்கூட்டத்தின்போது தமிழர்கூட்டணியின் ஆதரவு பெற்றவர்களுக்கு வெற்றி சேர்க்குமாறு கோரி தமிழர் கூட்டணியின் தலைவர்கள் திருவாளர்கள் மூதறிஞர் தந்தை செல்வா, அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், எஸ். தொண்டமான் ஆகிய நால்வரும் சுதந்திரன் மூலம் விடுத்திருந்த செய்தியில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் உண்மையற்றதும், தவறானதுமென்று குற்றம் சுமத்தி, அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஏடான 'எழுச்சியின்' முன்னாள் ஆசிரியர் திரு. மனோகரன் சுதந்திரன் ஆசிரியர் மீது பத்திரிகைப் பேரவையில் முறைப்பாடு ஒன்றைக் கொடுத்திருக்கிறார். இந்த முறைப்பாடு, 20-7-76ல் பத்திரிகைப் பேரவையின் விசாரணைக்கு வருகிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவர் சுதந்திரன் ஆசிரியர் மீது தொடர்ந்திருந்த வழக்கில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட தீர்ப்பு வாசகர்கள் அறிந்ததே.


### யோகக் கலை

15 மில்க் வைற் நீல சோப், அல்லது 2 பார் சோப், அல்லது 2 நீம் வாசனை சோப், அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர், அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் மேலுறைகளை அனுப்பிவைத்து யோகக் கலை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்;

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**


# எங்களைப் பிரிந்து செல்....

—4-ம் பக்கத்தொடர்

மும் அவரது சகாக்களும் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்பதனால் அப்படியான நடவடிக்கைக்கு தமிழ் மக்கள் நிச்சயம் அங்கீகாரம் வழங்கியிருப்பார்கள்.'

நீதி. செல்லையா: 'இவ்விதம் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை இங்கு எதிர்ப்பவர்கள் தேசிய அரசுப் பேரவையில் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு விசுவாசமாக இருப்போம் என்று ஏன் சத்தியப்பிரமாணம் செய்தார்கள்?'

திருச்செல்வம்: 'டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் தனக்கு நம்பிக்கையும் விருப்பமும் இல்லாத பழைய அரசியல் அமைப்புத்திட்டத்தை எதிர்த்து போராடுவதற்காக அந்த அரசியல் திட்டத்தின்கீழ் சத்தியப்பிரமாணம் செய்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே அடிப்படையிலேயே நாம் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டோம்.

சில நேரங்களில் சில மனிதர்கள் பல்வேறு காரணங்களுக்காக அப்படித்தான் செய்யவேண்டும். புதிய அரசியல் அமைப்புத்திட்டத்திற்கு விசுவாசமாக இருப்போம் என்று இங்கு சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு மறுதினம் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு போய் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை தீயிலிட்டுக் கொளுத்திவிடுகிறார்கள். வருடாவருடம் அவர்கள் மே 22ம் நாளன்று அரசியல சட்டத்துக்கு எதிராக கிளர்ச்சிசெய்யத் தவறுவதில்லை.'

—இவ்வாறு திருச்செல்வம் பேசினார்.


## 11-வது வெற்றி வாரம்!

## செல்லமகால்

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி,

நடித்த

ஜனாதிபதி விருது பெற்ற

# 'அவள் ஒரு தொடர் கதை'

திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

## கெப்பிட்டி

எம்.ஜி.ஆர். - தங்கவேலு

டி. ஆர். ராஜகுமாரி,

ஈ. வி. சரோஜா, சந்திரபாபு.

நடித்த

# குலேபகாவலி

## கிங்ஸ்லி

முத்துராமன், விஜயகுமாரி, ரவிச்சந்தர்

நடித்த

# அமுதா

## பிளாசா 2-வது வாரம்

முத்துராமன்- கே.ஆர்.விஜயா, ரவிச்சந்தர்

நடித்த-

# ரோசக்காரி

## 11-வது வெற்றி வாரம்

## கெப்பிட்டல்

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய்,

நடித்த—

# கெளரவம்

(ஈஸ்ட்மென் கலர்)

## வெலிங்டன் 23ம் திகதிமுதல்

சிவகுமார், ஜெயசித்ரா, கமலகாசன், ராணி சந்திரா,

தங்கவேலு, மனோரமா, சுந்தரராஜன், சோ —நடித்த

# தேன் சிந்துதே வானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஸிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் தாபனத்தாரால் கொழும்பு - 13 பண்டாரநாயக்கா வீதி, 194 ஆம் இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூலை மாதம் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.